

SPARKLE TOTS PRESCHOOL

BY PAP COMMUNITY FOUNDATION



# வாசிப்பின் மகிழ்ச்சி 2022

தளிர் மற்றும் மழலையர் வகுப்புகள்



நடவடிக்கை 1

# வணக்கம் சொல்லுங்கள்!

ஆங்கிலம் ஓர் உலகளாவிய மொழி. ஆனால், நமது தாய்மொழியும் பேச்சுவழக்குகளும் நமக்குத் தனித்தன்மை வாய்ந்தவை! குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரிடம் அவர்களின் மொழி / பேச்சு வழக்கில் 'வணக்கம்' சொல்லுவது எப்படி என்று உங்களுக்குக் கற்றுக்கொடுக்கும்படிக் கேட்பதன் மூலம் அவர்களுடன் உன்னதமானத் தொடர்பை உருவாக்குங்கள் .

**உங்கள் குழந்தையுடன் நீங்கள் என்ன செய்ய முடியும்:**

1. "வணக்கம்", "எப்படி இருக்கிறீர்கள்?", "சென்று வருகிறேன்" மற்றும் பிற முகமன்களை உங்கள் தாய்மொழியில் எப்படிச் சொல்வது என்று நினைவூட்டவும்.
2. தாத்தா, பாட்டி, நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரை அணுகி அவர்களின் தாய்மொழி / பேச்சு வழக்கில் முகமன்களை எப்படிச் சொல்வது என்று சொல்லித்தரச் சொல்லவும்.
3. வெவ்வேறு குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் அண்டை வீட்டாரைப் பார்க்கும் போதெல்லாம் கற்றுக்கொண்ட முகமன்களைப் பயன்படுத்த அவர்களை ஊக்குவிக்கவும்.

**தயார் செய்ய வேண்டியவை:**

ஒன்றுமில்லை

**கற்றுக்கொள்பவை:**

1. முகமன்களின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுதல்



*பெற்றோர்களுக்கான உதவிக்குறிப்புகள்:*

வெவ்வேறு மொழிகளில் 'வணக்கம்' எப்படிச் சொல்வது என்று அறிந்துகொள்வது, நம்மைச் சுற்றியுள்ளவர்களுடன் உரையாடலைத் துவங்குவதற்கும் அவர்களுடன் நல்ல உறவை வளர்த்துக்கொள்ளவும் உதவுகிறது.

நடவடிக்கை 2

# உருவப்படங்கள்

ஒவ்வொருவரும் வித்தியாசமானவர்கள் மற்றும் தனித்துவமானவர்கள். குடும்ப மற்றும் நண்பர்களின் வேடிக்கையான உருவப்படங்களை உருவாக்கவும்.

**தயார் செய்ய வேண்டியவை:**

1. மறுபயனீட்டுப் பொருள்கள்:
   - சஞ்சிகைகள் / செய்தித்தாள்கள்
   - அட்டைகள்
   - குடுவை மூடிகள்
   - தாள்கள்
2. இயற்கைப் பொருள்கள்
   - சருகுகள்
   - குச்சிகள்
3. பசை / ஒட்டு நாடாக்கள்
4. வண்ணத்தாள்கள் ( விரும்பினால் )

**கற்றுக்கொள்பவை:**

1. நம் உடலமைப்பில் ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள் மற்றும் தனித்துவமானவர்கள் என்பதைக் கண்டறிதல்
2. மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்கள் / இயற்கைப் பொருள்களைக் கொண்டு நம்மைச் சுற்றியுள்ள மக்களைப் போன்று உருவாக்குதல்

**உங்கள் குழந்தையுடன் நீங்கள் என்ன செய்ய முடியும்:**

1. குடும்ப மற்றும் நண்பர்களின் படங்களைப் பாருங்கள். கவனித்த ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றிப் பேசுங்கள். இதே போன்ற வாக்கியத் தொடர்களைப் பயன்படுத்தவும் :
   - எனக்கு அப்பாவினுடைய _____ பிடிக்கும்.
   - பாட்டிக்கு அழகான _____ இருக்கிறது.
2. ஒவ்வொரு குடும்ப உறுப்பினர் / நண்பரிடம் உள்ள தனித்துவமான உடல் அமைப்பை அறிந்த பிறகு, மறுசுழற்சி செய்யக்கூடிய பொருள்களை வைத்து உருவப்படங்களை உருவாக்கவும்.
3. உருவப்படத்தை வைத்துக்கொள்வதா அல்லது பரிசளிப்பதா என்பதை நீங்கள் முடிவு செய்துகொள்ளலாம்.



*பெற்றோர்களுக்கான உதவிக்குறிப்புகள்:*

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, உடல் அமைப்பைத் தவிர, விருப்பங்கள் மற்றும் பொழுதுபோக்குகளில் எப்படி மற்றவருடன் ஒத்தோ / வேறுபட்டோ இருக்கிறோம் என்பதையும் அறிந்துகொள்ளலாம்.